

சாகஸவீரன்
சிந்துபாத்!
ஜூனியர்
லயன் காமிக்ஸ்
ரூ. 2-50
முழு வண்ண
சித்திரக் கதை!


மினி
லயன்
ஆர்டிக் நரகம்!
ரூ. 2-50
சூப்பர் பைலட் ஸ்டைகர் சாகஸம்!
ஜூனியர் & மினி லயன்



..டப்! டப்! டப்! டப்! டப்! டப்...
கையிலிருந்த 'Adventures of Sherlock Holmes' ஐ வைத்து விட்டு நிமிர்ந்து பார்த்தான் வினோத்.

கண்ணாடி ஜன்னல்கள் மீது மழைத் துளிகள் 'பொத் பொத்' என மோதிக் கொண்டிருந்தன! கட்டிலிலிருந்து இறங்கிப் போய் வெளியே எட்டிப் பார்த்தான்.

மழை லேசாக ஆரம்பித்திருந்தது. தெரு லைட்கள் ஏகத்திற்கு ஸ்ட்ரைக் போலும்! கோடியில் ஒரே ஒரு லைட் மட்டும் கொஞ்சம் யோக்கியமாக '' எரியலாமா?- வேண்டாமா? '' என்று யோசித்துக் கொண்டிருந்தது.

ஹையா! மழை பெய்கிறது'' என்று சின்னக் குழந்தையைப்போல் சந்தோஷப்பட்டான் வினோத்.

திறந்த ஜன்னல் வழியாக சிலீர் என்று அறைந்த குளிர் காற்று, ஒரு வாளி ஐஸ் வாட்டரை மேலே கொட்டியது போன்ற உணர்வை ஏற்படுத்தியது. ஜன்னலை மூடிவிட்டு பாத்ரூம் போய் வந்தான்.

கீழே ஹாலில் டி. வி. ஓடிக் கொண்டிருக்கும் சப்தம் கேட்டது.

'இந்நேரம் என்ன புரோக்ராம்?' என்று நினைத்தவாறே படுக்கையோர மேஜையிலிருந்த சிறு டைம்பீஸைப்பார்த்தான் வினோத். போன மாதம் ஸ்கூலில் நடந்த '' க்விஸ் '' போட்டியில் கிடைத்த பரிசு அது. மணி 11.25 என்று காட்டியது.

''அப்பா லேட் நைட் நியூஸ்கேட்கிறார் போலும்'' என்று நினைத்துக் கொண்டே கட்டிலில் சாய்ந்தான். மழை ஆங்காரமாக ஊற்றிக்கொண்டிருந்தது. மேகங்களுக்கிடையே புதைந்து கிடந்த நிலவு லேசாக எட்டிப் பார்க்க முயன்று தோற்றுப் போனது...!

''பேய்ப் படங்களில் வரும் செட்டிங் போல் இருக்கிறதே!'' என்று நினைத்தவாறே வினோத் தூங்கிப் போனான்...!

# துப்பறியும் ஜூனியர்

– விஜயன்.

## தடங்கலுக்கு வருந்துகிறோம்!

விடிவதற்கு முன்னால் நம் கதாநாயகனைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டாமா!

வினோத் ஒரு ஜீனியஸ்! ஒரு பத்து நிமிஷம் பேசிக் கொண்டிருந்தால், நாமெல்லாம் எவ்வளவு பெரிய மடையர்கள் என்று புரிந்துவிடும்! பன்னிரெண்டு வயதுப் பொடியனுக்கு இவ்வளவு ஞானம் எப்படி வந்ததாம்! என்று மூக்கில் விரல் வைக்காத ஆளே கிடையாது! அவ்வளவு சமர்த்து!



பரிசுப் போட்டிகள்! விபரம் 127ம் பக்கத்தில்!

22 JUL 198
E.R.B. ... MADRAS-600 075.
ERB S LIB

Milton ன் Paradise lost ஐ ஒப்பிக்கச் சொல்லுங்கள் - வெளுத்துக் கட்டி விடுவான்! Internal Combustion engine எப்படி இயங்குகிறது என்று கேளுங்கள்-ஒரு குட்டி லெக்சரே அடிப்பான்! 1936-ம் ஆண்டு ஒலிம்பிக்ஸில் 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் கோல்டு மெடல் பெற்றது யார் என்று தெரிய வேண்டுமென்றால் நேராக விநோத்திடம் போங்கள்-ஒழுங்காகச் சொல்வான்!

சுருங்கச் சொன்னால் அவன் ஒரு நடமாடும் encyclopedia! அதனால் தான் அவன் பிரண்ட்செல்லாம் அவனுக்கு 'ஜூனியர் ஜீனியஸ்'' என்று பெயர் வைத்தார்கள்-

விநோத்தை இன்று பெயர் சொல்லி கூப்பிடுவது அவன் பெற்றோர்களும், ஸ்கூல் மாஸ்டர்களும் மட்டுமே! மற்ற எல்லோருக்கும் அவன் ஜூனியர் அல்லது ஜீனியஸ்'' தான் ஜூனியரின் உடம்பு மட்டுமல்ல-தலையும் கூட லேசானது தான்! கடுகளவு கூட தலைக்கனம் கிடையாது அவனிடம்! தேவையில்லாமல் பேசிக் கொண்டிருக்க மாட்டான்-பேசுபவர்களை தொந்தரவு செய்ய மாட்டான்! ஸ்போர்ட்ஸில் அவ்வளவாக ஆர்வம் கிடையாது! கிளாஸ் முடிந்தவுடன் நேராக லைப்ரரிக்குப் போய் விடுவான்!

ஜூனியரின் அப்பா மவுண்ட் ரோடில் ஒரு பிரைவேட் டிடக்டிவ் ஏஜென்சி நடத்தி வருபவர். பெயர் அஷோக்! மகனை டாக்டராகவோ, இஞ்சினியராகவோ படிக்க வைக்கப் போகிறேன் என்று பீற்றிக் கொள்வது கிடையாது!

"அவனுக்கு எதில் ஆர்வமோ, அதைச் செய்வான் சார்!" என்பார்! அத்தனை நம்பிக்கை ஜூனியர் மீது!

அம்மாவும் அதே போல தான்! "படித்தாயா! பரீட்சை எழுதினாயா" என்றெல்லாம் அறுப்பது கிடையாது!

மொத்தத்தில் அது ஒரு லட்சியக் குடும்பம்! சவுத் மெட்ராஸில் புதிதாக கட்டப்பட்ட V.I.P. நகரில் "தானுண்டு, தன் வேலையுண்டு" என்று இருந்து வரும் அமைதியான குடும்பம்!

இனி கதைக்குப் போகலாமே-!!



அன்று சனிக்கிழமை! ஸ்கூல் லீவு! ஆனாலும் ஜூனியர் ஏழு மணிக்கெல்லாம் எழுந்து விட்டான்!

மாடியில் அப்பா எக்ஸர்சைஸ் செய்து கொண்டிருந்தார்-

''குட் மார்னிங்! டிரைவிங் போக ரெடியா?'' என்று கேட்டார்!

''இதோ, அரை மணி நேரத்தில் கிளம்பி விடுவேன்!'' என்றவாரே குளிக்க ஓடினான் ஜூனியர்.

ஜூனியருக்கு கார் டிரைவிங் கற்றுத் தருவதாக அப்பா சொல்லியிருந்தார். எட்டு மணிக்குள் மாருதி கிளம்பி விட்டிருந்தது.

"கொஞ்சம் டிராபிக் இல்லாத ரோடு வந்தவுடன் இடம் மாறிக் கொள்வோம் விநோத்!'' என்றார் அஷோக்.


'சரி' என்பதற்கு அடையாளமாய் மண்டையை ஆட்டினான் ஜூனியர்.

V.I.P. நகரே குளித்திருந்தது. ரோடுகளெல்லாம் 'நச நச' வென்று ஈரமாய் கிடந்தன-! ஆனால் செடிகளும், மரங்களும் ஒரு மாதத்திற்குப் பிறகு தண்ணீரைப் பார்த்த சந்தோஷத்தில் நிமிர்ந்து நின்றன-

'பெட்ரோல் போட்டு விட்டுப் போவோமா?'' என்று கேட்டவாறே அஷோக் இடப் பக்கமாகத் திரும்பினார்.

ஐந்து நிமிடத்தில் பங்க் வந்தது. ஆனால் பங்க் முன்னர் ஒரு போலீஸ் ஜீப், மட்டும் நின்று கொண்டிருந்தது. ஜூனியரின் நெஞ்சு 'படக் படக்' கென்று அடித்துக் கொண்டது.

"என்னப்பா - போலீஸ்காரர்களாய் நிற்கிறார்களே-?'' என்று கேட்டான்.



அஷோக் பதில் எதும் பேசவில்லை மாருதியை ஓரமாக நிறுத்தி விட்டு போலீஸ் ஜீப்பை நோக்கி நடந்தார்.

''அப்பா பின்னால் போவதா? காரிலேயே இருப்பதா?'' என்று யோசித்தான் ஜுனியர். அப்பா வுடன் போவதே சரி என்று பட்டது மெதுவாக இறங்கி நடந்தான். காலை வெயில் உறைக்காமல் இதமாக இருந்தது.

'ஹலோ இன்ஸ்பெக்டர்! குட் மார்னிங்'' என்றார் அஷோக்.

யாரையோ விசாரித்துக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் திரும்பினார். பார்த்த மாத்திரத்தில் நடுநடுங்கச் செய்யும் தோற்றம்!

''அட்டே டிடக்டிவ் சாரா? சரியான நேரத்தில் தான் வந்திருக்கிறீர்கள்!'' என்றார்.

குரலைக் கேட்ட பின்னர் தான் ஜுனியருக்கு அவரை அடையாளம் தெரிந்தது. அவர் இன்ஸ்பெக்டர் ராஜு. அப்பாவுக்கு ரொம்பவும் பழக்கமானவர். எதாவது சிக்கலான கேஸ் வரும் பொழுது அப்பாவிடம் ஒப்பீனியன் கேட்க வீட்டுக்கு வருவார். ''யூனிபாரமில் இருக்கும் போது என்னமாய் ஆளே மாறி விட்டார்?'' என்று ஜுனியர் ஆச்சரியப் பட்டான்.

இன்ஸ்பெக்டருடன் மூன்று கான்ஸ்டபிள்களும், ஒரு ஃபோட்டோகிராபரும் நின்று கொண்டிருந்தார்கள். ஃபோட்டோகிராபர் 'பளிச் பளிச்' என்று எதை எதையோ படம் எடுத்துக் கொண்டிருந்தார்.

யாருக்கும் இடைஞ்சலாக இல்லாமல், ஒரு ஓரத்தில் நின்று நோட்டமிட்டான் ஜுனியர்.

சின்ன பங்க் தான் அது! சிறியதொரு ஆபீஸ் ரூம்... பின்னால் ஒரு ...




தான்! ஒரே ஒரு அம்பாஸிடர் கார் சர்வீஸ் செய்யப்பட்ட களையுடன் ஷெட் அருகே நின்று கொண்டிருந்தது.

அந்தக் காரின் சொந்தக்காரரை நினைத்து ஜுனியர் வருத்தப்பட்டான்.

''சுத்தமாக நிற்கும் கார், பங்கை விட்டு வெளியே போவதற்குள் சகதியாய் போய் விடுமே!'' என்று நினைத்தான்.

அப்பாவும் இன்ஸ்பெக்டரும் பேசிக் கொண்டிருந்தார்கள்...

''It's just a simple case of robbery' மிஸ்டர் அஷோக்! நேற்று இரவு இங்கிருந்து சுமார் மூவாயிரம் ரூபாய் கொள்ளையடிக்கப் பட்டிருக்கிறது!

''விபரமாய் சொல்லுங்களேன் சார்'' என்றார் அப்பா.

''ஓ, யெஸ்! சொல்கிறேன்...! இல்லை- அதை விட நல்ல ஐடியா... இந்த ஆளை நான் interrogate செய்யப் போகிறேன்! நீங்களும் வாருங்களேன்!

விறுவிறுவென்று ஆபீஸ் ரூமிற்குள் நடந்தார் இன்ஸ்பெக்டர். அஷோக்கும் கூடவே போனார்.



அந்த கப்பலின் தோற்றம் மட்டுமல்ல- செய்கையும் கூட புதுமையானது தான்.










கப்பலிலிருந்து சீறிக்கொண்டு வெளிப்பட்டது ஒரு சிறிய கலம்·





காப்டன் - என்ன அது? நம்மைத்தான் குறி வைத்து வருகிறது!
ஏதும் புரியவில்லை!
விஷ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்...




ஏதோ விபரீதம் நிகழப் போகிறது!


வில்சனின் கணிப்பு சரியே-
இதோ வயர்லஸ் தொடர்பை துண்டித்து விட்டேன்!


இந்த பட்டனை அழுத்தினால் எஞ்சினின் இயக்கம் தடைப்படும்!
மறுகணம் —


ஐயையோ — எஞ்சின் நின்றுவிட்டதே!
நமக்கென்று வந்து சேருகிறதே- சோதனைகள்!
சரி- சரி- புலம்பிக் கொண்டிராமல் தலைமையகத்துக்கு அவசர செய்தி அனுப்பு!
அப்போது திடீரென்று அசரீரியாக ஒரு குரல் கேட்டது-
நடக்காது- உங்களுடைய செய்தி தொடர்பு சாதனங்கள் துண்டிக்கப்பட்டுவிட்டன!



தட்டுத் தடுமாறியது விமானம்-
என் எச்சரிக்கையை கவனமாகக் கேட்டுக் கொள்ளுங்கள்! எங்களுடைய கப்பல் அருகே விமானத்தை நீரில் இறக்குங்கள் எஞ்சின் மீண்டும் உயிர் பெறும். இல்லையேல் அப்படியே கடலுச்குள் விழுந்து சாக வேண்டியது தான்!
அப்போதைக்கு அவன் சொற்படி கேட்பதைத் தவிர வேறு வழியில்லை-
சரி- உன் சொற்படியே செய்கிறோம். எஞ்சினை இயக்கம் பெறச்செய்!
14



சீக்கிரம்- இதோ விமானம் விழுந்து கொண்டிருக்கிறது!
பலே!
எஞ்சினை இயக்கி விட்டேன்- எங்களை ஏமாற்றி விட்டு தப்பியோடிவிட முயன்றால் சுட்டு வீழ்த்தி விடுவோம்- ஜாக்கிரதை!
15



டைகரின் விமானமும் வேண்டாத விருந்தாளியாக அருகே பறந்து கொண்டிருந்த எதிரிகளின் கலமும் கப்பலை நோக்கி இறங்கின-
கப்பலில் இருந்தவர்கள் உற்சாக மிகுதியால் துள்ளினர்-
சாதித்து விட்டீர்கள் புரபஸர்- உங்களுடைய படைப்பான அந்த கலத்தின் செயல்திறன் படு அபாரம்!
முக்கிய கட்டம் இனிமேல்தான் இருக்கிறது!
புரபஸர் என்று அழைக்கப்பட்ட டிக் பலமுறை சிறை சென்ற கேடி; நூதன கருவிகளை வடிவமைத்து விசித்திரமான முறையில் திருட்டு கொள்ளைகளை நடத்துவது அவனுடைய தனிச் சிறப்பு!
நெடுஞ்சாலைகளில்-
INTRANS L.B.



கடலில்-


ஆகாயத்தில்- இப்படி அவன் தன் கைவரிசையைக் காட்டாத இடமே இல்லை.
டுமீல்!


வாகனங்களை, கப்பல்களை, விமானங்களை வழி மறித்து மடக்கி அவற்றிலிருக்கும் விலையுயர்ந்த பொருட்களை அள்ளிச் சென்று விடுவான்-
ஆனால் இம்முறை டைக் தேர்ந்தெடுத்திருந்த 'இரை' சாமான்யப்பட்டதல்ல! தோல்வியை ஒப்புக்கொள்ளாத புலி அது! டைகர்- சூப்பர் பைலட் டைகர்!
விமானத்தில் டைனமைட் குச்சிகள் தாராளமாகவே இருக்கின்றன!
DYNAMIT





தன் குற்றம் வெளிப்பட்டுவிடாமலிருக்க ஸ்தலத்தில் இருந்தவர்களை பிடித்து வந்து விசேட சிகிச்சை முறையை பயன்படுத்தி அவர்களுடைய ஞாபக சக்தியை சிதைத்து விடுவது டைக்கின் வழக்கம்-
டைக் இப்போது வெற்றிக் களிப்போடு இருந்தான்-
விமானத்திலிலுள்ள பொருட்களை எடுத்து வாருங்கள்- அப்படியே அந்த ஆசாமிகள் இருவரையும் இழுத்து வந்து E.B முன் நிறுத்துங்கள்!
E.B என்று அவன் குறிப்பிட்டது நினைவாற்றலை சிதைக்கும் திறன் கொண்ட இயந்திரத்தை!


ஆனல்-
இன்னும் ஒரிரு கணங்களில் நான் எப்படிப்பட்டவன் என்று அவர்-களுக்கு புரிந்து விடும்!
TIONS FRANCAISES


கலத்தை குறி வைத்து
தூக்கி எறிந்தார்
டைனமைட் கட்டுகளை.



டமால்!


கப்பலில் இருந்தவர்களுக்கு அதிர்ச்சி! மிரட்சி-
ஹேய்- என்ன இது- என்ன செய்கிறார்கள்!
அவர்கள் அதிர்ச்சியிலிருந்து மீளுமுன் சட்டென்று விமானத்தை கிளப்பி மேலே ஏற்றினர் டைகர்-
இப்போது என்ன செய்வது புரபஸர்? இன்னொரு கலத்தை அனுப்பி மீண்டும் அவர்களை மடக்குவோமா?
ஊஹூம்- பலனளிக்காது!
விலையுயர்ந்த தன் புதிர் கருவிகளை வீணடிக்க டிக் விரும்பவில்லை. வேறு ஏதாவது ஒரு உபாயத்தை கையாள நினைத்தான்-
EXPEDITIONS FRANÇAISES


டைகரின் விமானம் விலகிச் சென்று மறைந்த சில நிமிடங்களுக்கெல்லாம் இன்னொரு கலம் வெளியேறி இலக்கை குறிவைத்து கிளம்பியது-
அதே சமயம்-


நீரில் இறங்க வசதி கொண்ட மூன்று விமானங்களும் மேலெழும்பின-
அவற்றின் இலக்கு, வட துருவத்தில் அமைக்கப்பட்டிருந்த பிரெஞ்சு ஆராய்ச்சித் தளம்-
விரைவில்-
நம்மை நோக்கித்தான் வருகிருர்கள்!




கலத்திலிருந்து புறப்பட்ட கதிர் வீச்சு தளத்தின் மின் கம்பிகளைத் தாக்கியது-
?!
!?
என்ன துணிச்சல்! ஓடு-எச்சரிக்கை குரல் எழுப்பு!


விமானங்களிலிருந்து இறங்கிய கொள்ளைக்கூட்டம் புயலென ஓடி வந்தது-
எதிர்பாராத தாக்குதல்- எதிர் நடவடிக்கை எடுக்க அவகாசம் இல்லை. எவ்வித போராட்டமும் இன்றி தளத்தை கைப்பற்றிக் கொண்டது அந்த அயோக்கியக் கும்பல்-
யாரும் அசையாதீர்கள்!




கொள்ளையர்களின் பைலட் வெற்றிச் செய்தியை பாஸுக்குத் தெரியப்படுத்தினன்-
ஹலோ! PR-2 பேசுகிறேன்!
யெஸ்• செய்தியைச் சொல்!
ஆர்ட்டிகா பிரெஞ்ச்தளத்தை கைப்பற்றி விட்டோம்- நம் விசேஷ படகுகளை உடனே அனுப்புங்கள்!


அந்தக் கிழவனின் நயவஞ்சக முகத்தில் ஒரு மகிழ்ச்சிப் புன்னகை இழையோடியது-
பலே- பையன்கள் அட்டகாசம் பண்ணிவிட்டார்கள். விரைவிலேயே என் இலட்சியம் முழுமையாக நிறைவேறிவிடும்!



புரபஸர் டிக்கின் ஆற்றல் மிக்க விந்தைப் படகுகள் நீரைக் கிழித்துக் கொண்டு பறந்தன-


ப்ரெஞ்ச் படைத் தளத்தை நோக்கி!


அதே தருணத்தில் பிரெஞ்சுத் தளத்தின் ஆராய்ச்சி விமானிகளான டைகரும் வில்சனும் தளத்துக்கு திரும்பிக் கொண்டிருந்தனர்.
நம்மை ஏன் மறுபடியும் துரத்தி வரவில்லை?
நல்ல வேளை என்று அதை மறக்க முயற்சிப்பீர்களா- அதை விட்டுவிட்டு.
ஆனல், அவர்கள் படைத் தளத்தில் வந்து விமானத்தை தரையிறக்கியதும்-
EXPEDITIO


திமு திமு வென்று ஓடி வந்தனர் டைக்கின் ஆட்கள்-
ம்- மரியாதையாக கைகளை உயரே தூக்குங்கள்- இல்லையேல் சுட்டுத் தள்ளிவிடுவோம்- ஜாக்கிரதை!
தளத்திலிருந்தவர்களை ஏற்கனவே ஒரு அறையினுள் தள்ளி பூட்டி வைத்திருந்தனர்.
ஓ- நம் பழைய கதாநாயகர்களல்லவா ம்- ஆரம்பிக்கலாமா?


கொஞ்சம் பொறு! விசேட படகுகளும் வந்து சேரட்டும்!
இரண்டு மணி நேரம் கழித்து எதிர்பார்த்த படகுகள் வந்து சேர்ந்தன-
அதோ!
கிறீச்ச்!
தரையிலும் செல்லக்கூடிய வகையில் வடிவமைக்கப் பட்டிருந்தன அந்தப் படகுகள்-


தளத்திலிருந்த பொருட்களை கொள்ளையடித்து அந்தப் படகுகளில் நிரப்பினர்-
எல்லாவற்றையும் சுருட்டிக் கொண்டாயிற்று!
இனி இவன்களைக் கவனிப்போம்!


கவனிப்பது என்ருல் வேறென்ன?
ஞாபக சக்தியை அழிப்பதுதான்-
ஐயோ- என்ன என்ன செய்யப் போகிறீர்-
கள் என்னை? வேண்டாம் விட்டுவிடுங்கள்!
அவனுடைய கதறலைக் கேட்டு அந்தக் கல்நெஞ்சக்
காரர்கள் கொஞ்சமும் இரக்கம் காட்டவில்லை-
ஐயாவுக்கு தலையை மசாஜ் செய்யப்
போகிருர்கள்- அப்படியே மூளையையும்
ஒரு லேசான அமுக்கு- எல்லாமே
ஃப்ரீ தான்!




மின்சார
அதிர்ச்சி-
விளைவு?
இனிமேல் தன் பெயர் கூட ஞாபகம்
வராது இவனுக்கு! ம்- கொண்டு
வாருங்கள் அடுத்தவனை!
ஆ!
அடுத்து நின்றவர்
டைகர் தான்!
என்னிடமா வாலாட்டப்
பார்க்கிறீர்கள்!











PH: 49260 P.P.
E.R.B. SARGUNAR,
No. 3 3rd CROSS STREET,
KRISHNA NAGAR PAMMAL.
MADRAS-600 075.



அவர்களை சமாளிப்பது ஒன்றும் அத்தனை கஷ்டமான காரியமல்ல!


ஒரு சில நிமிடங்களுக்குப்பின் சில பிரெஞ்ச் படை வீரர்களோடு வந்த டைகரும் வில்சனும் டாங்க் ஒன்றினுள் புகுந்தனர்–




எதிர்ப்பட்டவர்களை இயந்திரத் துப்பாக்கி வீழ்த்தியது.
டுமீல்!
ஆ!


சில படகுகளும் நாசமாயின- எதிரிகள் செய்வதறியாது சிதறி ஓடினர்–










தொடர்ச்சி 98-ம் பக்கம்




வாசகர்களே,

சிறு குழந்தைகளுக்குக் கூட பிடிக்கக் கூடிய விதத்தில் இந்த " சிந்துபாத் " கதைகள் உருவாக்கப்பட்டுள்ளன! கபடமற்ற சிறுவன் சிந்துபாத் மாயாஜால உலகில் சாதனைகள் பல புரிந்து வெற்றி காண்பதை ஸ்வாரஸ்யமான 12 கதைகளாக அமைத்துள்ளோம். அவற்றுள் முதல் சாகஸத்தை படித்துப் பாருங்களேன்!


சாகஸ வீரன் சிந்துபாத்!
பல நூறுஆண்டுகளுக்கு முன், பூமி தட்டையானது என்று மக்கள் நம்பிக்கொண்டிருந்த காலத்தில் நடந்த சம்பவம் இது —
அரேபியாவின் நல்முத்து என்று புகழ்பெற்றிருந்த அழகிய பாக்தாத் நகரின் சுறுசுறுப்பான வியாபார சதுக்கத்தில் அலைந்துகொண்டிருந்தான் ஒரு சிறுவன் ..
அடேய் பொடியா என் ஒட்டகத்தைப் பார்த்து கேலியாக சிரிப்பதை நிறுத்தப்போகிருயா இல்லையா?
அதுமட்டும் என்னைப்பார்த்து கோணங்கித்தனமாக முறைக்கலாமாக்கும் ?
44


சிந்துபாத் எழுந்து விட்டிருப்பாஞ?
சிந்துபாத் ஹே-சிந்துபாத்..! இன்னுமா தூக்கிக் கொண்டிருக்கிருய் — சோம்பேறி...!
எழுந்து வந்து ஜன்னலைத் திற!
யாரது என்னை இவ்வளவு அதிகாலையில் எழுப்புவது? ஓ....ஹாஸன் நீயா!
இறங்கிவா . ஒரு வணிகர் கூட்டம் வந்திருக்கிறது அங்கே.
45


அடடே.. நீயா- பார்த்து வெகுநாளாகி விட்டது!
சே...இவன் கண்ணில் பட்டுத் தொலைந்து விட்டேனே !
சிந்து பாத்தும், ஹாஸனும் உள்ளே போய் வணிகர்களின்கடைகளை பார்க்க ஆசைப்பட்டனர். ஆனால் கோட்டையின் நுழைவாயிலில் நின்ற காவலாளி அவர்களை உள்ளே விடுவதாக இல்லை!




இங்கே எதைத் திருட வந்தீர்கள்? ஓடிப் போங்களடா குட்டிபிசாசுகளா!
களிமண் உருண்டைகள் தான் இந்த களிமண் தலையனுக்கு லாயக்கு!
நாங்கள் ஒன்றும் திருடர்களல்ல-அதை நீ புரிந்துகொள்ள வேண்டும்... முதலில்!
சொத்
ஓடாதே . நில்- பின்னர் வருத்தப்படுவாய்!
மிகவும் சாதாரணமானதந்திரம்!
என் நண்பன் ஹாஸன் இப்படித்தான் சிலவேளைகளில் பேருதவியாக இருப்பான்!


சுல்தானின் மகளுக்கு ஏற்ற மாதிரி— அத்தனை வனப்புடையது இந்த கம்பளம்!
இந்த முரட்டுத் துணியாலும் ஒரு திரைகூடப் பெருது!
வணிகர்கள் மூட்டைகளை பிரித்து வியாபாரத்தை ஆரம்பித்தனர் ...
லபக்!
ஹே! காவலாளியோ?
இல்லை...! அவன் இன்னமும் என்னைத்தேடி எங்கோ ஓடிக் கொண்டிருக்கிருன்!
உன் தந்திரம்... படு அபாரம்- ஹாஸன்!
அங்கே பார்- ஒரு பக்கிரி..!



நான் ரொம்ப சின்னப் பையன் இல்லாவிடில் என்னலும் இதை செய்துகாட்ட முடியும்!
ஆங் ஆனலும் இது ரொம்ப பயங்கரம்தான்!
வா அந்தப் பக்கமாக போய் பார்ப்போம்!
யாரோ... கூச்சல் போடுகிருர்கள்!
அடேய் யூசுப்- அற்பப்பதரே..! கொசுவை நசுக்குவதுபோல் உன்னை இப்போது நசுக்கப் போகிறேன் . பார்!
இந்த மிரட்டலுக்கெல்லாம் நான் பயந்தவனில்லை!
உள்ளே பலத்த வாக்கு வாதம் நடக்கிறது!
எட்டிப்பார்த்த தோழர்களிருவரும் எதிரே விரிந்தகாட்சியைக் கண்டு மிரண்டு போனர்கள்!


என்னிடமிருந்து தப்பிவிட
முடியுமென்று கனவு
காணுதே!
மாமிச மலையே—
உன்னை வெட்டி வீழ்த்
தாமல் விடப்போவ
தில்லை நான்!
நான் யாரென்று
தெரியாமல் பேசு
கிருய்!
தெரியாமல் என்ன ?அந்த
அயோக்கிய ராஸ்கல்
ஹலீமோவின் அடியாள்
தானே நீ!





ஆவ்— ஸ்டூல் ..!
தடால்!
துரதிர்ஷ்டவசமாக அருகே
கிடந்த ஸ்டூல் தடுக்கி கீழே
சரிகிருன்...யூசுப்!
அவன் சுதாரித்துக்கொண்டு
எழ ஒரு சில விநாடிகள்பிடித்தது
உன்னை அழித்துவிட்டு
வருமாறு எனக்கு
உத்தரவு . !
நடக்காது .. ஒரு
போதும்!
வேண்டாம்!...
விட்டுவிடு!



அட . ராட்சஸன் மாயமாக மறைந்து விட்டானே!
சே.. அன்னியன் ஒருவன் என்னைப்பார்த்து விட்டான்- நான் மறைந்து விட வேண்டும்!
வழியை விடு —
பூதம்!
கோபக்காரன் ஒருவனின் அடிமை இந்த பூதம்.




என் உயிரை காப்பாற்றி விட்டாய்.. ஆயிரம்கோடி நன்றி உனக்கு!
திரும்பவும் வருவானா.. அந்த ராட்சஸன்?
உறுதியாக சொல்வதற்கில்லை!
நாங்கள் உங்களுக்கு உதவமுடியும் என்று நினைக்கிறேன் .
ரெம்ப சந்தோஷம்!
விஷயம் முழுவதையும் விபரமாக சொல்கிறேன்.. கவனமாக கேட்டுக்கொண்டே வாருங்கள்.


சுலைமா பேரழகி... அவளுடைய உதடுகள் ரோஜா மொக்குகள் போல் மென்மையானவை.,
அன்பே... யூசுப்-நான்உங்களுக்கே சொந்தம்
உன்னைப் போன்ற பேரழகி உலகில் எங்கே தேடினாலும் கிடைக்கமாட்டாள். சுலைமா!
என் மருமகளை நீ மணந்து கொள்ள ஒரு போதும் அனுமதியேன் வேறொரு திட்டம் வைத்திருக்கிறேன் நான்.
இதோ... இந்தக்கட்டாரி உன் காதலுக்கு சமாதி கட்டப்போகிறது!
யூசுப்பின் நெஞ்சை குறி வைத்துப் பறந்தது அந்தக் கத்தி
54



ஆவ்.. என்ன விபரீதம் இது?
சதக்!
தொடர்ந்து- அன்றே என்னைக் கொல்ல இன்னொரு முயற்சி தோல்வியடைந்தது-
பொத்!
யாரோ என்னைக் கொல்ல முயற்சிக்கிறார்கள்...
55


மறு நாள்
அந்த சைத்தானின் இன்னுமொரு தூதுவன்!
ஹி.. ஹி தூதுவனில்லை சைத்தானே நேரில் வந்திருக்கிறேன்!
உடனே நாட்டைவிட்டு ஓடிப்போய்விடு- இல்லையேல்





என் உயிருக்கு ஆபத்து!
முதலில் உங்களை காப்பாற்றிக்கொள்ளுங்கள்
புறப்படுங்கள்.. உடனே! மன்றாடி கேட்டுக்கொள் கிறேன் உங்களை!
அன்பே — எங்கிருந் தாலும் வாழ்க!
விரைவிலேயே மீண்டும் உன்னிடம் வந்து சேருவேன் ஜுலைமா
ஹா ஹா!
இப்படியாக அந்த மூர்க்கன் ஹலீமோ தன் திட்டத்தின் முதல் கட்டத்தில் வெற்றி பெற்று விட்டான்...


அந்த அயோக்கியனுக்கு ஜால வித்தைகள் தெரியும். நான் சுலேமாவை சுலபத்தில் மறந்து விடமாட்டேனென்று அவனுக்குத் தெரியும். எனவே விடாமல் என்னைத்துரத்தி வருகிறான்!
பேசாமல் சுலேமாவை கடத்திக் கொண்டு வந்து விடுவோம்!
ஊஹூம் . வம்பாகிவிடும்! அத்தோடுஅது சுலபமான காரியமுமல்ல!
உங்களுக்கு அச்சமாக இருக்கிறதா?
அச்சமா.,?சேச்சே.. நான் கோழையல்ல!
பின்னே.... என்ன? கிளம்புங்கள்.. !
58


ஓமர். இமாம் . பயணத்திற்கான பெட்டி படுக்கைகளை உடனே தயார்செய்யுங்கள்!
டப் டப்!
சரி... மாஸ்டர்!
எங்களுக்கும் சேர்த்தா- மாஸ்டர்!
இல்லை... நீங்கள் இங்கேயே இருந்து வீட்டைப்பார்த்துக் கொள்ளுங்கள்!
சரி... மாஸ்டர்
ஒரு அனுபவமிக்க இனியபயணம் தொடங்கப் போகிறது ஹாஸன்!
உற்சாகத்திற்கு இனி குறைவே இராது!
59


அரை நாள் பயணத்திற்குப் பின் —
எனக்கு போதும்போதும் என்றாகிவிட்டது சிந்துபாத்!
அதோ... அந்த மலைக் குத்தான் நாம்போக வேண்டும்.
அங்கே என்ன அசம்பாவிதம் காத்திருக்கிறதோ நமக்கு? வாருங்கள் பேசாமல் திரும்பி விடலாம்!
நீ எப்போதும் அடுத்தவர்கள் விவகாரத்தில் தேவையில்லாமல் மூக்கை நுழைக்கிறாய்.
ஆனால்.. வந்து — ஹாஸன்...
60


இனி நான் எதையும் பேசப் போவதில்லை. வாயைத் திறந்தால் மணல் உள்ளே போய் விடும்.
வீசத் தொடங்கிய சூறைக்காற்று பயணத்தை மேலே தொடர முடியாமல் தடுத்தது ...
அதோ . சுலைமாவின் மாமன் ஹலீமோ.
ஹா ஹா ஹா!
ஓ சூறாவளியை உருவாக்கியவனே அவன்தானோ?
நமக்கு அவன் விடும் எச்சரிக்கை இது!
அலட்டிக் கொள்ளாதீர்கள்!
61


மேலும் ஒருமணி நேரம் கழித்து —
பாட்டில் காலியா?
ஒரு சொட்டுக்கூட இல்லை
அதோ அங்கே ஒரு பாலை வனச்சோலை தென்படு கிறது என்னோடு வாருங் கள்
ஓ அங்கே தென்படுவது- தண்ணீர்..! இல்லை. இல்லை அமிர்தம்தான்! ஆகா..!
ஒட்டகங்களுக்கும் தாகம் அதிகம் போலும்!




சுனை நீர்— பளிங்கு போல் !
அப்பப்பா .. என்ன தாகம்—
போய் வேண்டிய மட்டும் குடிக்க லாம்— வா!
முதலில் அங்கே யார் போய் சேருவார்கள் .
நான் தான் —
இல்லை நான்தான் !
அட அல்லா!
வெறும் மணல் தானிருக்கிறது!
மாயத் தோற்றம்... மறைந்து விட்டது!
ப்ளாப்!


நிச்சயம் இது அந்த கொடியவன் ஹலீமோவின் ஜாலவித்தையாகத்தானிருக்கும்!
உங்களையுமல்லவா ஆபத்தில் சிக்க வைத்து விட்டேன்!
சேச்சே ஒரு ஆபத்தும் இல்லை—
இது ஹலீமோவின் விஷமமாக இருந்தால் இந்த அசம்பாவிதத்துக்கு முடிவுகட்ட என்னால் முடியும்.
இப்போதுதான் ஞாபகம் வருகிறது . பாலைவனத்திலுள்ள தண்ணீர் மாய மந்திரங்களின் பாதிப்புக்கு உள்ளாவதே இல்லை!



பலிக்குமா?
யாருடைய ஜாலவித்தையானாலும் சரி—கட்டுப்பட்டு மறைந்துவிட்ட தண்ணீரே! விடுபட்டு மீண்டும் வெளி வருவாயாக!
க்ளக்! ப்ளப்!
ஆகாகா ஹலீமோவை தோற்கடித்து விட்டாயே..!
அல்லா . ! பிழைத்துக்கொண்டோம்!


ஏய் ஏய், நிறுத்து! என் குல்லாய் நனைந்துவிடப் போகிறது!
உடம்பை கொஞ்சம் நனைத்துக்கொள்வது நல்லதுதான்!
ஹலீமோவின் ஆதிக்கம் இன்னமும் இங்கே இருந்தால் ?
அந்த கொடியவனின் ஆதிக்கத்தைத்தான் முறியடித்துவிட்டேனே இன்னும்என்னகலக்கம்?
சாப்பிடுவதைப்பற்றி ஆலோசித்தாயா?
ஆமாம் ஆமாம்— சூரியன்கூட அஸ்தமனத்தை நெருங்கிவிட்டது!
66


இன்னும் நெடிய பயணம் பாக்கியிருக்கிறது!
சிலமணி நேரமாவது நன்றாக தூங்க வேண்டும்!
எதைப்பற்றியும் கவலைப் படாமல் நிம்மதியாக தூங்குங்கள்!
சற்றைக்கெல்லாம் மூவரும் நித்திரையிலாழ்ந்தனர்—
இதையெல்லாம் சுலைமா அறிந்தால்..
67


சிந்துபாத் ஆழ்ந்த தூக்கத்
தில் இருந்ததால் எதை
யுமே அறியவில்லை ..
காற்றினல் பரவிய தீ அவனுடைய
போர்வையில் பற்றிக்கொண்டது .
என் ஆற்றலை அறியாத
மூடர்கள் . !ஹா..ஹா!
அவாகளுக்குஒருபாடம்
கற்பித்தாக வேண்டும்!
68


என்ன ஒரேயடியாக
தகிக்கிறது ...! .
அவன் விழித்துக்கொள்ளக்
கூடும்..! ஆனல் அதைப்
பற்றிஎனக்குஅக்கறையில்லை
ஹா க..க.,
கழுதைப் புலி—
அத்தோடு என்
போர்வையில் தீ . !
69


முதலில் இந்த மிருகத்தை விரட்டியடிக்க வேண்டும் !
சனியனே... போய்த்தொலே!
என்ன... இந்தக் குள்ள னிடம் தோற்று ஓடுவதா?
ஹாஹ் . ஹாஹா உன்னே பிறகுகவனித் துக்கொள்கிறேன்!
இப்படி வெறித்தனமாக சிரிக்கக்கூடிய நபர் யாரென்று நானறிவேன்!



பதற்றமடையத் தேவை யில்லே... யூசுப்!
ஹலீமோ!
கழுதைப் புலியாக வந்தது ஹலீமோ என்ருசொல்கிறீர்கள்?
ஆமாம்...! இனியும் இங்கே இருந்தால் ஆபத்து!
எழுந்திரு ஹாஸன் .. பயணத்தைதொடர லாம்!
ஆனல் .. இன்னமும் விடியவில்லேயே — போச்சு என்தூக்கம்!


அந்தப் பிறை நிலாவை திசை காட்டியாக வைத்துக் கொண் டால் பாதை தவறிவிடாது!
ஆமாம்... இப்போது அது நமக்கு நேர் வலது பக்கத்தில் இருக்கிறது!
உஸ்... அப்பாடா...!
ஹேய் ஹாஸன்-தூங்கி வழியாதே இன்னமும்! கீழே விழுந்து தொலேக் கப்போகிருய்!
என்னசொல்கிருய் நீ நான் எங்கே. எதன் மீது இருக்கிறேன்-கீழே விழ?
என்னேக்கேலி செய்வாயே கும்பகர்ணன் என்று எப்போதும் தூங்கிவழிகிற நபர் யார் இங்கே?
72


ஆனல்.,வந்து-பயணம் என்று வந்து விட்டால் உன் சுறுசுறுப்பே தனிதான்!
என்ன ஆயிற்று... இந்த பிறை நிலாவிற்கு?
திடீரென்று, நம் இடப் பக்கம் வந்துவிட்டதே!
அதோ....அதே ஈச்சமரங்கள்!
73




அதே ஈச்சமரங்கள் என்றால்?
நாம் தங்கி ஓய்வெடுத்த இடத்திலிருந்தமரங்கள்!
ஹாஸன் சொல்வது சரிதான்!
நாம் ஒரே இடத்தை சுற்றி யிருக்கிறோம்...! எல்லாம் அந்த நாசமாகப் போகிற ஹலீமோவின் சூழ்ச்சி!
இந்த பாலைவனத்தை நம்மால் கடக்கவே முடியாது!
நாம் அந்த மலைக்கு வருவதை அவன் விரும்பமாட்டான்.





நிதானமாக ஆலோசனை செய்வோம்!
ஊஹூம் எனக்கு ஒரு வழியும் புலப்படவில்லை.
நான் சொல்வதை கேளுங்கள்...!
யாரது...?
ஹலீமோ ஒரு ராட்சஸ பறவையை அனுப்புகிறான் எங்கேயாவது பாதுகாப்பாக ஒளிந்து கொள்ளுங்கள்.
ஈச்சமரமா பேசுவது?
ஹூம் வீட்டிலே மெத்தையில் ஜாலியாக தூங்குவதைவிட்டு ஏன்தான் இங்கேவந்து மாட்டிக் கொண்டேனோ?
அப்படித்தான் தோன்றுகிறது


பேசுவது ஈச்சமரம் அல்ல ஒருசிறுபறவை என் பெயர் ஷைலா!
கவனமாக கேளுங்கள் நான் சொல்வதை!
ஹா..ஹா.. ஒரு சிறு பறவை எங்களுக்கு அறிவுரை சொல்வதா?
சரி அப்படியானால் நான் போகிறேன்!
ஆனால்... வந்து ஷைலா— உன்னை கேலிசெய்யும்நோக்கத்தில் சிந்துபாத் அப்படி பேசவில்லை கோபம் கொள்ளாதே.. திரும்பி வா— ஹலீமோவைப்பற்றி உனக்கு தெரிந்ததையெல்லாம் சொல்!
76


போகாதே.. ஷைலா!
சிறிய பறவைக்கு பொறுமையும் கொஞ்சம்தான் - புரிந்துகொள் ..நான் போகிறேன்!
யூசுப்பின் வேண்டுகோளை புறக்கணித்துவிட்டு ஜிவ்வென்று பறந்து போய்விட்டது ஷைலா!
அதோ... மறுபடியும் மலை தென்படுகிறது!
சுலைமாவின்மீது எனக்குள்ள அன்பு தூய்மையானது என்றால் நாம்அந்தமலைக்குச் சென்றடைவதை யாராலும் எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்தவே முடியாது...
77


அதோ.. அங்கே வானில் என்ன அது சிந்துபாத்?
ஹா. ஹா..ஒருவேளை ஷைலா குறிப்பிட்ட ராடசஸ பறவையோ?
ஆனால் இவை ஈயைவிட ரொம்ப சிறிதாக அல் லவோ இருக்கின்றன..!
ஷைலா!
ஒரேயடியாக கோபித்துக் கொண்டுபோய்விட்டா யாக்கும்என்று நினைத்தேன்!
கோபம்தான்.!ஆனால் உங்களுக்கு உடனடி யாக என்னுடைய உதவி தேவை!





மறுபடியும் என்னை அலட்சியப்படுத்தி கோபமூட்டக்கூடாது
யாருக்கு வேண்டும் இங்கே உன்னைப் போன்றதொரு அற்பப் பறவையின் உதவி— நீ போகலாம்!
சரி உன் இஷ்டம்! ஆனாலும் நான் உங்களுடனே முடிந்த வரை ஒத்தாசையாக இருப்பேன்!
உதவி செய்யும் நல் லெண்ணம் கொண்ட வர் யாராயினும் அவர்களுக்கு இங்கே வரவேற்பு உண்டு.


பயணம் தொடர்ந்தது
ஓ என் அன்பு சுலைமாவின் முக வசீகரம் உதய சூரியனின் பிரகாசத்தையும் மிஞ்சிவிடக்கூடியது!
ஓ எத்தனை உற்சாகமான பயணம் இது!
இந்த உலகிலேயே எனக்கு மிகவும் பிடித்தமானது ஒன்றுஉண்டெனில் அது நான் சொகுசாக படுத்து றங்கும்பட்டுமெத்தைதான்
ஷைலாவின் கூற்று பொய்! எந்த ராட்சஸ பறவையும் கண்ணில் படவேயில்லைஇதுவரை!
கேலியா செய்கிறாய் ! பொறுத்திருந்து பார்! இதுவரை இந்த ஷைலா எந்த தவறான தகவலையும்கொடுத்தது கிடையாது!


ஆபத்திலிருந்து உங்களை காப்பாற்றப் போவதும் நான்தான்
முதலில் என் தலையை விட்டு இறங்கு!
கத்தாதே. ! ஆபத்து வந்துசேர்ந்துவிடப் போகிறது!
திறமையான ஒரு கோமாளியாக காட்சியளிக்கிறாய் ஹாஹா!
இப்படி தலைமீது ஒரு பறவையை வைத்துக் கொண்டு ஒட்டக பயணத்தைவிடகீழேஇறங்கி ஓட்டம் பிடிப்பதையே விரும்புகிறேன்... !
ஹாஸன்— எங்கள் அருகிலேயே இரு.! விலகிச்செல்லாதே அப்படி!
அவனுக்கு என்னஆபத்து வந்துவிடப் போகிறது இங்கே-- கண்ணுக் கெட்டியதூரம்வரை எவ்வித நடமாட்டமும் இல்லாத போது?


வேக நடைபோட்ட ஹாஸனின் ஒட்டகம் ஓரிடத்தில் தடுமாறி தள்ளாடியது ...
ஏதோ விபரீதம். தான்!
அதோ மேலே
ஹாஸன்!!
82


உதவி...உதவி- ராட்சஸ பறவை என்னை தூக்கிச் செல்கிறது!
ஹாஸனுக்கு எப்படி உதவி செய்வது...? ஆங்- ஓர் ஐடியா!
அந்தப்பறவையை வீழ்த்தஇந்த தலைப் பாகைஉதவும்!
83


நான் கொஞ்சம் வேகமாக செயல்படவேண்டியது அவசியது..!
இதோ...என்றைக்குமே என்குறி தப்பியதில்லை!
விஷ்ஷ்!
கா..கா..கா
அந்தக்கல் பறவையை தாக்குவது நிச்சயம்!
ஆனால் சட்டென்று வளையமிட்டுப் பறந்தது அந்த ராட்சஸபறவை..
விர்ர்ர்க்...!



தப்பிவிட்டதாக மனப்பால் குடிக்கிறாயா... உன்னை நான் விடுவதாக இல்லை-
இதோ...வருகிறது அடுத்தபாணம்—
ஆனால் .. என்னால் பறக்க முடியாதே!
இம்முறை கல் பறவையை தாக்கியது ..
ஐயோ.... செத்தேன்!


ஆ...வ்!
தொப்!
முதுகெலும்பு இன்னுமா
முழுசாக இருக்கிறது?
வலி பிராணன்போகிறது!
ராட்சஸ பறவையிட
மிருந்து தப்பியதுபெரிய
காரியமல்லவா...!
உடையெல்லாம் ஏகப்
பட்ட மணல்!
மெள்ள . மெள்ள..!
தொட்டாலேவலிக்
கிறது அப்பனே!
திரும்பிப்பாருங்கள்..!



ஹலீமோவின்
பறவைகள்!
உங்கஃள காப்பாற்றிக்
கொள்ள என்ஃன பின்
தொடர்ந்து ஓடிவாருங்
கள்அந்தகுகையை
நோக்கி!
சீக்கிரம் . ! அவை
நெருங்கி விட்டன!
சூருவளி மாதிரி
என்னமாய் சீறிக்
கொண்டுவருகின்றன!
அவை சிறகடிக்கும்
ஓசைஇங்கே கேட்
கிறது!


மூன்றுபேரையுமே கவர்ந்து வர வேண்டும்!
ஹலீமோவின் உத்தரவு அப்படி!
பாறை அருகே அசுரவேகத்தில் சிறகடித்ததால் காற்றில் ஏற்பட்ட அதிர்வு விபரீதத்தை விளைவித்தது...
தொபுக்!
ஒருபறவை கீழே வீழ்ந்து மணலில் புதையுண்டது..




இரண்டு பறவைகளே பாக்கி!
நம்மை தீர்த்துக் கட்ட இரண்டே போதும்!
ஓடி வாருங்கள்— சீக்கிரம் இந்த குகைவழியே ஹலீமோவின் அரண்மனையை சென்றடைய ஒரு சுரங்கப் பாதை உண்டு!
ஆவ்... ராட்சஸ வௌவால்கள்!
என்னமாய் முறைக்கின்றன!


அதோ...தெரிகிறது அரண்மனை!
என் அன்பே சுலைமா! உன்னை சிறைமீட்க இதோ வந்துவிட்டேன் உன் அன்பன் யூசுப்!
சுரங்கப்பாதையின் முடிவில்—
சுலைமா ... என் ஆருயிரே!
வேகத்தைப் பாரேன்!






ஹலீமா!
ஐயோ..பூதம் என் சுலைமாவை இறுகபற்றிக் கொண்டு நிற்கிறதே..!
என்னதைரியமிருந்தால் இங்கே நீ வருவாய்?
யூசுப் இங்கிருந்து ஓடிப் போய் விடுங்கள்-இல்லையேல் உங்கள் உயிருக்கே ஆபத்து வரலாம்.


இல்லை சுலைமா. என் உயிரே போனாலும் உன்னை அந்த பூதத்திடமிருந்து மீட்கா- மல் போய் விட்டான்!
நில் ..!
விஸ்ஸ்ஸ்...!
ஹலீமோவின் தலைப்பாகை முகப்பிலிருந்த மந்திரக் கல்லிலிருந்து பாய்ந்த மாயக்கதிர் கள் யூசுப்பை நகரவிடாமல் தடுத்துநிறுத்தின...
ஹா- ஹா- மாஸ்டரை மிஞ்சிய மந்திரவாதி எந்த கீழ்த்திசைநாட்- டிலும் கிடையாது!
விடு என்னை...என் அன்பரிடம் போக வேண்டும் நான்!
என்ன சொல் கிறாய்?
எப்படியாவது அந்த மந்திரக் கல்லைநொறுக் கிவிடவேண்டும் நீ.



பிறகு... ஹலீமோவின் மந்திர தந்திரங்கள் பலிக்காது- சுலபமாக முறியடித்துவிடலாம்.
அப்படியா சேதி.,! மறு படியும் இந்த தலைப்பாகை தான் எனக்கு உதவப் போகிறது!
அந்த மந்திரக் கல் தான் என் இலக்கு!
அப்ப்...!
விர்ர்ர்ர்ர்ர்...!


இந்தப் பொடியன் விளையாட்டுத்தனமாக எதையோ செய்கிருனே எதற்காக?
மறுவினடி
கல் நொறுங்கி விட்டது நம் கை ஓங்கிவிட்டது!
பேராற்றல் படைத்தவர்களுக்கே நான் ஊழியம் செய்வேன்! நீ உன் ஆற்றலை இழந்துவிட்டாய் எனவே உன்னை விட்டு பிரிந்து போகிறேன்...!
ஐயோ... இனி என் அற்புதஆற்றல்கள் எல்லாம் செல்லுபடியாகாதே!
94



அட... அப்படியே புகையாகிகாற்றில் கலந்துவிட்டதே... பூதம்!
சுலைமா.. என் அன்பே!
ஓடி வா...என்னருகே— இனி நம்மைப் பிரிக்க எந்த சக்தியாலும் முடியாது
யூசுப்...!
95


என்னை மன்னித் தருளவேண்டும் .. சிந்துபாத்!
மன்னிப்பு வழங்குகிறேன் ஆனால் ஒரு நிபந்தனை — மந்திரசக்தியால் பிறரை இனி நீ துன்புறுத்தக் கூடாது...
அத்தோடு நீ சுலைமா வின் மாமன் என்பதால் தண்டிக்காமல் விடுகி றேன்!
எல்லாம் நல்லபடியாக முடிநது விட்டது— இப்போது திருப்தி தானே!
இனி நீ என் குல்லாய் மீது உட்கார்ந்து கழுத்தறுக்க மாட்டாய் என்று நம்ப லாமா?





உன்னைப் பிரிந்திருந்த நாட்களில் எப்படி துடித்துப் போனேன் தெரியுமா!
அப்படி சிரித்துச் சிரித்து வாய்ஓயாமல் என்ன தான் பேசுகிறார்கள்!
இளைஞனே பின்னர் தானாகவே விளங்கும் உனக்கு! — அதுவரை பொறு !
உங்களைப் போன்ற பராக்கிரமசாலியை கணவராக அடை யப்போகும் நான் நிச்சயம்பாக்கியவதி தான்!
முற்றும்

42-ம் பக்கத் தொடர்ச்சி





வில்சன் நீ ஹெலிகாப்டரை கிளப்பு- நான் விமானத்தை ஓட்டி வருகிறேன்!
யெஸ்- காப்டன்!
அடுத்த சில கணங்களில் அவர்கள் மேலே பறந்து கொண்டிருந்தனர்-
ஏதோ பெரிய யுத்தமே நடந்தது மாதிரியல்லவா இருக்கிறது!



கொஞ்சம் டைனமைட் குச்சிகளை நினைவுப் பரிசாக கொடுத்துவிட்டுப் போவோமே!
ஓ-ஷ்யூர்!
வேடிக்கையை பாருங்களேன்!
டாம்-டும் என்று எங்கு பார்த்தாலும் வெடி முழக்கம்-எதிரிகள் இணறிப் போனார்கள்-
டமால்
ஓடித் தப்பிக்க முயற்சி செய்யுங்கள்-புரபஸருக்கு தகவல் கொடுக்க வேண்டும்-



ஹலோ-P-R-3 பேசு
கிறேன்-தோற்றுப்போய்
விட்டோம்-கப்பலுக்கு
திரும்பிக் கொண்டிருக்
கிறோம்-
இன்னும் கொஞ்சம்
கவனிப்போமா-
பயல்களை?
வேண்டாம்-
போதும்!





நாம் வந்த வழியில் மீன்
பிடி கப்பல் ஒன்றை
பார்த்தேன். அங்கே
செல்வோம்!
உதவி கிடைப்பதோடு,
தகவல் கொடுக்க வசதி
யும் கிட்டும்!


இப்படியொரு மோசமான தோல்வியை கொஞ்சமும் எதிர்பார்த்திராத டீக் கொதித்தெழுந்தான்-
முட்டாள்கள்! அடி முட்டாள்கள்! அனைத்தையும் கோட்டை விட்டு விட்டார்களே! சே!
நம் நாசகாரி விமானத்தை அனுப்பி ஆர்ட்டிகா படைத்தளம், விமானம், ஹெலிகாப்டர் அனைத்தையும் அழித்து நாசமாக்குங்கள்-
எனக்குக் கிடைக்காமல் போனது எவருக்கும் பயன்படக் கூடாது!






மறு நிமிடம்-ஒலியையும் மிஞ்சிய வேகத்தில் பாய்ந்து கிளம்பியது அந்த நாசகாரி விமானம்-
ஹொஹ்ஷ!


சில நிமிடங்களில் பிரஞ்ச் படைத் தளத்தை சென்றடைந்தது-
ஆர்ட்டிகா பகுதி மொத்தமும் தீப்பற்றி எரியப் போகிறது!
விசித்திரமான கோளங்களை உமிழ்ந்தது அந்த போர் விமானம்-
மறுகணம் மின்னல் வேகத்தில் மேலெழும்பியது-


அந்த கோளங்கள் வெடித்துச் சிதறி-
டமால்!
அழிவையும், நாசத்தையும் விளைவித்தன-
அடேயப்பா! புரபஸர் பலே ஆசாமிதான்- சந்தேகமேயில்லே!
அடுத்த இலக்கு அந்த கோமாளிகள்!



அங்கே
விரட்டி வந்த அபாயத்தை தெரிந்து கொண்டனர்-
நம்மைத்தான் குறி வைத்து வருகிறது!
குறுகலான இடத்தில் ஹெலி காப்டரை இறக்குமாறு வில்சனுக்கு தகவல் கொடு!


கிடைத்த தகவலின்படி சந்து போன்ற இடுக்கில் ஹெலிகாப்டரை இறக்கினான் வில்சன்-
நாம் தப்பி விட்டோம்!
ஆனால் டைகரோடு இருந்தவர்களின் நிலைமை அவ்வளவு திருப்திகரமாக இல்லை-


அடிபட்டு விட்டோம்!
உயிர்க்காப்பு மிதவைகளை தவிர மற்றவற்றை. வெளியே எறிந்துவிடுங்கள்-எப்படியாவது கரையை எட்டிவிட முயற்சிக்கிறேன்!



எமனுய் தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்க, டைகர் தன் திறமையனைத்தையும் பயன்படுத்தி விமானத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முயற்சித்தார்-
அதோ- கடற்கரை!


கரை அருகாமையில் இருந்த தோடு, உதவி செய்யக்கூடிய மீன்பிடி கப்பலும் அங்கே நின்று கொண்டிருந்தது-
உயிர்க்காப்பு மிதவைகளை நீரில் போடுங்கள்!



தொபுக்!



தாக்குதலுக்கு உள்ளான விமானம் வெகு வேகமாக உயரமிழந்து வந்தது-
விமானத்திலிருந்து குதித்து, மிதவைகளை நோக்கி நீந்துங்கள்-


பனிக்கடலை நோக்கிப்
பாய்ந்தது விமானம்-
அதிர்ஷ்டவசமாக தப்பிவிட்டோம்-
கணப்பொழுது தாமதித்திருந்தாலும்
கடலினுள் விழுந்து வெடித்துச் சிதறும்
அந்த விமானமே நம் கல்லறையாகிப்
போயிருக்கும்!
டமால்!




!?!
ரட்-டட்-டட
ஆனால் நாசகாரி விமானம்
அவர்களை விடுவதாக இல்லை-
தப்பிவிட்டோம் என்று நினைத்துச்
கொண்டிருக்கிறீர்களா பயல்களா?


ஆனால் டைகரின் குழுவுக்கு அதிர்ஷ்டம் தொடர்ந்து கை கொடுத்து உதவியது-மீன்பிடி படகு உருவில்-இம்முறை!
அங்கே என்ன தான் நடக்கிறது?


எது எப்படியிருந்தாலும் நிராயுத பாணிகளை தாக்குவது நியாயமா காது-அந்த அப்பாவிகளின் சார்பில் நானும் ஆட்டத்தில் கலந்து கொள்ளப் போகிறேன்!


டட்-டட்-டட்!


ஆஹா! அடித்து வீழ்த்தி விட்டேன்!
டமால்!
!?


தறிகெட்டுப் போய் பாய்ந்தது விமானம்!




ஒழிந்து போ! எல்லா பாவிகளையும் இந்தக் கடல் ஏற்றுக் கொள் ளும்-ஒரேயடியாக மூழ்கித் தொலை!
தொப்!



புரபஸர் டிக் குழப்பமும், கவலையுமாக திணறிக் கொண்டிருந்தான்-!
போனவர்களிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை-நாசகாரி விமானத்தின் கதியும் தெரியவில்லை-தோல்வி படுபயங்கரமான தோல்வி!
இனியும் இங்கே காலதாமதம் செய்து கொண்டிருப்பதில் பயனில்லை-
நாமே சென்று நேரடியாக கலந்து கொள்வதென்று தீர்மானித்து விட்டேன்-
யெஸ்-புரபஸர்!
120




ஆர்ட்டிகா படைத் தளத்துக்கு செல்வோம்!
ஆனால், ஹெலிகாப்டரிலிருந்த வயர்லெஸ் மூலம் வில்சன் அனுப்பிய செய்தியை கேட்டறிந்த ஸ்வீடன் நாட்டு இராணுவம் ஏற்கனவே அங்கே வந்து ஆர்ட்டிகா படை தளத்தை காத்து நின்றது-
121












''லயன் புக் ஹவுஸ்'' நிறுவனத்தின் சார்பாக ''ஜூனியர் & மினி-லயன்'' வெளியிடுபவரும் ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: லயன் புக் ஹவுஸ், த. பெ. எண். 55, சிவகாசி-626 123.
வெளியிடுவோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி. போன்: 21159. வெளியீடு எண்: 6.

தலையில் பாண்டேஜுடன் ஒரு வழுக்கைத் தலை மனிதர் ரூமில் உட்கார்ந்திருந்தார்! ஆதிகாலத்து ஃபேன் ஒன்று ஆர்ப்பாட்டம் பண்ணிக் கொண்டு கைகளை சுற்றிக் கொண்டிருந்தது. ரூமின் ஓரத்தில் ஒரு சிறு இரும்பு பீரோ - திறந்து கிடந்தது!

'மிஸ்டர் ஷண்முகம், நேற்றிரவு நடந்த சம்பவங்களை கொஞ்சம் விளக்கமாகச் சொல்கிறீர்களா'?' என்று அந்த வழுக்கைத்தலை நபரை இன்ஸ்பெக்டர் கேட்டுக்கொண்டார்


வெளியே நின்று கண்ணாடி ஜன்னல்கள் வழியாக எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான் ஜுனியர். "இன்று நான் டிரைவிங் படித்தாற் போலத் தான்" என்று அலுத்துக் கொண்டான்.

அதற்குள் அந்த வழுக்கை தலையரின் கீச்'சுக் குரல் கேட்டது!

"இன்ஸ்பெக்டர் சார்-எங்கள் பங்க் 24 மணி நேரமும் திறந்திருக்கும்! எங்களுக்கு 12 மணி நேர டியூட்டி. காலை ஒன்பதிலிருந்து நைட் ஒன்பது வரை நாங்கள் மூன்று பேர் வேலை செய்கிறோம்-"

"ஒன் மினிட்- என்று குறுக்கிட்டார் இன்ஸ்பெக்டர். பகல் ஷிப்டில் உங்களையும் சேர்த்து மூன்று பேர் தானு?

"ஆமாம் சார்! நான்தான் அக்கவுண்டண்ட். கோபாலும் மித்ரகாந்தும் பங்க் ஆப்பரேட்டர்கள். அவ்வப்போது வாட்டர் சர்வீஸையும் பார்த்துக் கொள்வார்கள்."



● உலகில் இயற்கையாக வளரும் பூக்களில் [illegible] பாதி தென் அமெரிக்காவில்தான் வளருகின்றன!

"எவ்வளவு காலமாக நீங்கள் இங்கே வேலை பார்க்கிறீர்கள்?"

"நான் இங்கு வந்து கிட்டத்தட்ட ஒன்பது வருஷம் ஆகிறது சார்! கோபால் போன அக்டோபரில் வந்தான்-மித்ரகாந்த் - ம்ம்ம் - அவன் வந்து இரண்டு வருஷம் ஆகிறது சார்!"

"அதுசரி, உங்களுக்கு நேற்று பகல் ஷிப்ட் தானே? பின்னர் இரவு பன்னிரெண்டு வரை என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?"

"வாஸ்தவம் தான் சார்! எங்கள் டியூட்டி ஒன்பதோடு முடிந்து விட்டது- ஆனல் நேற்று சாயந்திரத்தோடு பெட்ரோல் இருப்பு முழுவதுமாய் தீர்ந்து போய் விட்டது. சப்ளை லாரி இன்று மதியம் தான் வரும் என்பதால் நேற்று மட்டும் பங்க்கை இரவில் பூட்டி விட்டுப் போகலாம் என்று நினைத்தோம். அதனல் நைட் ஷிப்ட்காரர்களை நான்தான் போகச் சொல்லிவிட்டேன். கணக்கு முடிப்பதற்கு கொஞ்சம் நேரமாகி விட்டதால் பங்க்கை பூட்ட லேட்டாகி விட்டது. அதற்குள் இந்த படுபாவிகள் வந்து பணத்தை கொள்ளையடித்து விட்டார்கள்!

"எவ்வளவு பணம் களவு போனது மிஸ்டர் ஷண்முகம்?"

"மூவாயிரத்து நூறு ரூபாய் சார்! வழக்கமாக ஒன்பது மணிக்கு நான் வேலை முடித்துப் போகும் போது, கையிலிருக்கும் பணத்தின் பெரும் பகுதியை முதலாளி வீட்டில் ஒப்படைத்து விட்டுப் போவேன்! ஆனல் நேற்று இரவு பத்து மணிக்கு திடீரென முதலாளி வீட்டில் திருச்சி புறப்பட்டுப்போய்விட்டதால், பணம் பங்க்கிலேயே இருந்து விட்டது!"

ஜுனியர் கேட்டுக் கொண்டிருந்தான். "ஒரே நாளில் மூவாயிரம் ரூபாய்க்கு பெட்ரோல் விறகுமா?" என்று ஆச்சரியப்பட்டான்.

"கொள்ளை நடந்த போது மணி என்ன இருக்கும் மிஸ்டர் ஷண்முகம்"

"கணக்கு முடித்து விட்டு பணத்தை எண்ணி பீரோவில் வைத்துப் பூட்டிக் கொண்டிருந்த போது மணியைப் பார்த்தேன் சார். சரியாக 11-15. வெளி லைட்டை அணைத்து விட்டு கோபாலுக்கு சத்தம்கொடுத்தேன். ஆனல் அவனை ஆளையே காணவில்லை! வெளியே வந்து எட்டிப் பார்த்த பொழுது 'திடும்' மென பிடரியில் ஒரு அடி விழுந்தது. அதற்குப் பிறகு என்ன நடந்தது என்றே தெரியாது. முழித்து பார்த்த பொழுது ஆஸ்பத்திரியில் இருந்தேன்.

"நீங்கள் குரல் கொடுத்தபோது கோபால் வரவில்லையா?"

"ஆமாம் சார்! அவன் அடிபட்டுக் கிடந்தான் என்பது பிறகுதான் தெரிந்தது"

"அதுசரி, இன்னெரு ஆப்பரேட்டர் மித்ரகாந்த் என்ன ஆனுன்?"

"நேற்று மதியமே ஜுரம் என்று லீவில் போய் விட்டான் சார். இரவு நானும் கோபாலும் மட்டும் தான் இருந்தோம்."

"ஓ.கே. மிஸ்டர் ஷண்முகம், இன்னும் ஒரே ஒரு கேள்வி மட்டும் இரவு உங்கள் பங்கிற்கு நிறைய வண்டிகள் வருமா?"

"ஆமாம் சார்! இந்தப் பக்கத்தில் 24 மணி நேரமும் திறந்திருக்கும் பங்க் இது ஒன்று தான் என்பதால் நிறையப் பேர் வருவதுண்டு."

"ஆல்ரைட்! நீங்கள் ரெஸ்ட் எடுங்கள்! நான் கோபாலுடன் பேசி விட்டு வருகிறேன்" என்றவாறே இன்ஸ்பெக்டர் ரூமிலிருந்து வெளியே வந்தார்!

வெளியே வந்தவுடன் "என்ன டிடக்டிவ் சார்? கேஸைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"இப்போதைக்கு ஒன்று மே தோன்றவில்லை இன்ஸ்பெக்டர்."

"சரி, கோபாலிடம் விசாரிப்போம்" என்றவாறே நடந்தார்.

ஓரமாய் நின்று கொண்டிருந்த ஜுனியரைப் பார்த்து 'சாரி வினேத் இன்னும் ஒரு அரை மணிநேரத்தில் கிளம்பி விடலாம்' என்றார் அஷோக்.

ஜுனியர் பதில் எதும் பேசவில்லை.

"கோபால் நேற்று ராத்திரி V.I.P. நகர் போலீஸ் ஸ்டேஷனில் கொள்ளையைப் பற்றி தகவல் கொடுத்தது நீ தானே?"

"ஆமாங்க ஐயா!" என்ற அந்த உருவத்தை ஏறிட்டுப் பார்த்தான் ஜுனியர். குள்ளமாய் ப்ளூ கலர் யூனிபார்மில் நின்று கொண்டிருந்தான் கோபால். நெற்றியிலும், முழங்கையிலும் பிளாஸ்திரி போட்டிருந்தான். அடிக்கொருதரம், அவனது இடது கண் நட்சத்திரத்தைப் போல சிமிட்டிக் கொண்டே இருந்தது.

"நடந்ததை கொஞ்சம் விளக்கமாக சொல்லப்பா! என்றார் அஷோக்.

"ஐயா, நேத்து பெட்ரோல் தீர்ந்து போச்சு! அதனலே ராத்திரி பங்க்கை மூடிவிடலாம்னு ஷண்முகம் சார் சொன்ஞரு. கிட்டத் தட்ட பதினென்னேகால் மணிக்கு ஷெட் கதவை பூட்டிவிட்டு வந்த போது கறுப்பு அம்பாஸிடர்கார் பெட்ரோல் போட வந்துச்சு. காருக்குள்ளே மூணு பேர் இருந்தாங்க..."

"கார் நம்பரை கவனித்தாயா?"

''இல்லீங்க, இன்ஸ்பெக்டர்! காரைப் பார்த்தவுடன் 'பெட்ரோல் இல்லேப்பா! பங்க் க்ளோஸாயிட்டது'னு கத்தினேன். முன் பக்கத்திலிருந்து ரெண்டு பேர் இறங்கி வந்தார்கள்.''

''அவர்களை அடையாளம் சொல்ல உன்னால் முடியுமா?''

''டிரைவரின் முகத்தை மட்டும் பார்த்தேன்! நெற்றியில் கர்சீப் கட்டிக் கொண்டிருந்தான்! கண்ணெல்லாம் ஒரே சிவப்பாக இருந்தது! கிட்டத்தட்ட ஆறடி உயரம் இருப்பான்....'' என்று அடுக்கிக் கொண்டே போனான் கோபால்.



''சரி, அப்புறம் என்ன நடந்தது?''

''டிரைவர் என் கிட்டே வந்து, 'அடுத்த பங்க் எங்கே இருக்குன்னு' கேட்டான். நான் பதில் சொல்வதற்குள் மண்டையில் ஒரே போடு போட்டு விட்டான் இன்னொருத்தன் அத்தோட சரி, நான் எழுந்திருச்ச போது ஒரே மழை! ஆபீஸருமிற்குள் ஷண்முகம் சார் மயக்கமாய் குப்புற கிடந்தார். தலையெல்லாம் ஒரே ரத்தம்! பீரோவும் திறந்து கிடந்தது. எனக்கு கையும் ஓடவில்லை- காலும் ஓடவில்லை! பைத்தியக் காரனைப் போல வெளியேவந்து நின்னபோது அந்தப் பாவிகளின் கார் தடம் சகதியில் தெரிந்தது. என்ன செய்கிறோம்னு தெரியாமலேயே தடத்தை தொடர்ந்து ஓடினேன் - கிறுக்கனைப் போல! மெயின் ரோட்டில் போய் நின்னபோது தான் போலீஸுக்குப் போக வேணுமே என்று நினைவு வந்தது

''சரி, சரி, மேற்கொண்டு விபரம் தேவைப்பட்டால் கூப்பிட்டு விடுகிறேன்! எங்கேயும் போய் விடாதே!'' என்றவாறே இன்ஸ்பெக்டர் ஜீப்பை நோக்கி நகர்ந்தார்.

''இன்ஸ்பெக்டர் அடுத்து என்ன செய்வதாய் உத்தேசம்?'' அஷோக் கேட்டார்.

''டயர் தடங்களை 'பிரிண்ட்' எடுத்துப் பார்க்க வேண்டும்-! அப்புறமாக Mug Shots ஐ கோபாலிடம் காண்பித்து, அந்த டிரைவரை கண்டு பிடிக்க முடிகிறதா என்று பார்க்க வேண்டும்'' என்றார்.

டயர் தடங்களை வைத்தே நிறைய விஷயங்களைக் கண்டு பிடிக்க முடியுமென்று ஜூனியருக்குத் தெரியும். டயர் புதிதா-வெட்டுப்பட்டதா-வித்தியாசமான tread கொண்டதா - என்றெல்லாம் போலீஸாருக்குத் தெரிந்தால், துப்புத் துலக்குவதில் பெரும் உதவியாக இருக்குமென்று அவன் படித்திருந்தான்.

அஷோக் இன்ஸ்பெக்டரிடம் விடைபெற்றார். 'ஆல் தி பெஸ்ட் சார்! இந்த கேஸில் என்னால் ஆகக்கூடியது ஏதும் இருப்பதாய் தெரியவில்லை! நான் புறப்படுகிறேன்! ''வினோத்-போகலாம் வா!'' என்றவாறே மாருதியை நோக்கி நடந்தார்



ஜூனியருக்கு என்னவோ உதைத்தது! மெள்ள அப்பா பின்னால் நடந்தான்!

'ரொம்ப சாரி வினோத்! நேரமாகி விட்டதில்லையா?' என்றார்.

''அப்பா இந்தக் கேஸைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்றான் ஜூனியர்.

வழக்கமான வழிப்பறிக் கொள்ளை லிஸ்டில் இதை சேர்க்க வேண்டியதுதான் வினோத்! குற்றவாளிகளை ராஜூ எப்படியாவது பிடித்துவிடுவார்'' என்றார் அஷோக்!

**பரிசு!**

நம் ஜூனியர்கூமினியில் எங்களுக்கென சில பக்கங்கள், போட்டிகள் வைத்தாலென்ன என்று நிறைய வாசகர்கள் நச்சரித்துக் கொண்டு இருக்கிறார்கள்! அவர்கள் அனைவரின் ஆசையையும் பூர்த்தி செய்யும் பொருட்டு இந்த மாதம் முதல் நம் இதழில் வாசகர்களுக்கென பக்கங்கள் காத்திருக்கும்! கதைகள், ஜோக்குகள், துணுக்குகள், கட்டுரைகள், படங்கள்- எல்லாமே வரவேற்கப்படும்! பிரசுரமாகும் படைப்புகளுக்கு பரிசுகள் உண்டு! ஆகைகளுக்கு யால் பேனாவை எடுத்துக் கொண்டு எழுதித் தள்ளுங்கள்!



''அப்பா! குற்றவாளி இங்கேயே இருக்கும்போது வீணாய் ஏன் சிரமப்பட வேண்டும்?' என்றான் ஜூனியர் திடீரென !

''நீ - நீ என்ன சொல்கிறாய் வினோத்?'' என்றார் அஷோக்!

''ஆமாம்பா! குற்றவாளி யாரென்று எனக்குத் தெரியும்'' என்று ஆரம்பித்தான் ஜூனியர்-

## ஜூனியர் என்ன சொல்லியிருப்பான்? குற்றவாளி யார்? ஜூனியர் எப்படிக் கண்டுபிடித்தான்?

உங்களுக்குத் தெரியவில்லையென்றால், பக்கத்தைப் புரட்டுங்கள்!



ஜூனியர் அப்பாவிடம் என்ன சொன்னுனென்ருல்-

"அப்பா-! ஆப்பரேட்டர் கோபால் தான் குற்றவாளி! கறுப்பு கலர் கார்-கர்சீப் கட்டிய டிரைவர் - எல்லாமே கட்டுக்கதை-! கோபாலின் கற்பனைப் பாத்திரங்கள்!"

'அது எப்படி உனக்குத் தெரியும்?' என்ருர் அஷோக்!

"அப்பா! இது திட்டமிட்ட கொள்ளையாக இருக்கவே முடியாது! ஏனென்ருல் வழக்கத்துக்கு மாருக நேற்று இரவு மட்டும் பங்கில் பணம் இருந்த விஷயம் இரண்டே பேருக்குத் தான் தெரியும்! ஒருத்தர் ஷண்முகம்-இன்னெருத்தர் கோபால்!

முதலாளி வீட்டில் இரவு பத்தரை மணிக்கு மேல் ஊருக்குப் போயிருக்கிருர்கள் என்ற விஷயமோ, அதனுல் பங்கிலேயே பணம் இருக்கின்ற விஷயமோ வெளி நபர்களுக்கு தெரிய வாய்ப்பில்லை! இது திடீர் சபலத்தால், நடத்தப்பட்ட Solo கொள்ளை!-மூச்சு வாங்காமல் பேசினுன் ஜூனியர்.

"அது மட்டுமல்ல கொள்ளையை தத்ருபமாக, ஜோடிக்க வேண்டுமென்ற ஆத்திரத்தில் கோபால் பெரிய தவறு செய்துவிட்டான்! இத்தனை நேரமும் அது நம் கண் முன்னுல் தான் இருந்தது!" என்ருன் ஜூனியர்.

"என்ன சொல்கிருய் நீ?"

"அப்பா-பங்கில் கொள்ளையர்களின் கார் ஏற்படுத்தியிருந்த தடங்களைப் பார்த்தீர்களல்லவா? அந்தத் தடங்கள் தான் கோபாலின் Waterloo! யோசித்துப் பாருங்கள்-இந்தக் கேஸில் 'டைமிங்' உதைக்கிறது! மெட்ருஸ் முழுவதும் ஒரு மாதமாய் மழையே கிடையாது! தரையெல்லாம் காய்ந்து, இறுகிப்போய் கிடந்தது! கோபால் சொன்னதுபோல நேற்று இரவு 11-15 மணிக்கு திருடர்களின் கார் வந்திருக்குமேயானுல், கான்க்ரீட் போல உலர்ந்து கிடக்கும் தரையில் எந்தவித டயர் தடமும் பதிந்திருக்க முடியாதே! ஏனென்ருல்-நேற்று மழை தொடங்கியது 11-25 க்குத்தான்! ஆனுல் கொள்ளை நடந்தது 11-15க்கு என்று ஷண்முகம் சொன்னுரல்லவா?"



அஷோக்கின் முகத்தில் நெளிந்த குழப்ப ரேகைகள் லேசாகத் தணிந்தன!

"குறைந்த பட்சம் கால் மணி நேரமாவது மழை ஊற்றிய பிறகு தான் மண் பதமாகியிருக்கும்-தண்ணீர் கட்டிக் கொண்டு சகதியாகியிருக்கும்! அதன் பின்னர் திருடர்களின் கார் வந்திருந்தால் டயர் தடப் பதிய வாய்ப்புண்டு! ஆனுல் அந்த யூகத்தின்படி பார்த்தால் மழை விழத் தொடங்கியதிலிருந்து கால்மணி நேரமாவது கழித்துத் தான் - அதாவது 11-40 க்கு மேலாகத் தான் கொள்ளை நடந்திருக்க வேண்டும்! அதற்கு முன்னதாக எந்நேரம் திருட்டு நடந்திருந்தாலும், டயர் தடங்கள் பதிய வாய்ப்பேயில்லை!" என்ருன் ஜூனியர். தொடர்ந்து-

"நடந்தது இதுதான்! திடீரென முதலாளி வீட்டிலிருந்து வெளியூர் புறப்பட்டு விட்டதால் பணத்தை பங்கிலேயே வைத்திருக்க வேண்டியதாகி விட்டது. கோபாலுக்கு இது தெரிந்தவுடன் சபலம் தட்டியிருக்க வேண்டும்! மெயின் ரோடை விட்டு பங்க் கொஞ்சம் விலகியிருப்பதால் இந்தப் பக்கம் ஆள் நடமாட்டம் அதிகமாக கிடையாது என்பது கோபாலுக்குத் தெரியும். அதுமட்டுமல்லாமல் இன்னெரு ஆப்பரேட்டர் தற்செயலாக லீவு என்பதால், ஷண்முகத்தை மட்டும் அடித்துப் போட்டு விட்டால் பணத்தை சுருட்டி விடலாமென்று நினைத்திருப்பான்.

பண வெறியில் பின் விளைவுகளைப் பற்றி யோசிக்காமல் ஷண்முகத்தை அடித்துப் போட்டு பணத்தை திருடி விட்டிருப்பான்! அதற்குப்பிறகுதான் போலீஸ் கேஸ்-என்று வந்தால்தன் மீது சந்தேகம் விழுமே என்பது உரைத்திருக்கும்.

என்ன செய்வதென்று தெரியாமல் கையைப் பிசைந்து கொண்டு நின்று கொண்டிருக்கும் போது மழை பெய்யத் தொடங்கியிருக்கும். போலீஸாரை திசை திருப்ப இது தான் அருமையான சமயம் என்று தீர்மானித்து, மழை வலுக்கும் வரை பொருத்திருந்திருப்பான்.

கால்மணி நேரம் கழித்து, 11-40 சுமாருக்கு, தரையெல்லாம் ஈரமாகி சகதியாகி விட்டவுடன், பின்னுல் ஷெட்டில் சர்வீஸுக்கு நிற்கும் காரில் ஒன்றை எடுத்து, வேண்டுமென்றே பங்கின் முன் ஓட்டி டயர் தடங்களை ஏற்படுத்தியிருப்பான். பின்னர் காரை எங்காவது போய் நிறுத்தி விட்டு, நேராக போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் நல்லபிள்ளை போல புகார் செய்திருப்பான்!

போலீஸ் வந்து பார்க்கும்போது அடிபட்டுக் கிடக்கும் ஷண்முகமும், டயர் தடங்களும் தான் தெரியும். அவர்களும்கம்ப்ளேண்ட்பதிவுசெய்து கொண்டு விட்டார்கள். கோபால் எல்லோர் காதிலும் பூச் சுற்றி விட்டான்!" என்று முடித்தான் ஜூனியர்.


அஷோக்கின் முகம் சிவப்பாகியிருந்தது-! பெருமையினுலா-? அவமானத்தினுலா-? என்று புரியவில்லை!

"வினேத்-யூ ஆர் எ-ஜூனியஸ்" என்று மட்டும் சொன்னுர்.

மறுகணம் படாரென்று மாருதியை திறந்து பங்கை நோக்கி ஓடினுர்-

"கோபால் கோவிந்தா!" என்று ஜூனியர் நினைத்துக் கொண்டான்!

முற்றும்.


22 JUL 1987
அடுத்த வெளியீடு!
சிந்துபாத்!-IV
&
சூப்பர் ஹீரோ
ஸ்பைடர்!
ரூ-2-50.


ஜூலை 1ல் கிடைக்கு
ஆண்டு மலர்!
லயன் காமிக்ஸ்
ரூ. 3/-
அதிகப் பக்கங்கள்!